கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

**அசல் வழக்கு எண் 2/2023**

பிரதிவாதி தரப்பு சாட்சி –1 கதிரேசன் திரு. M.பெரியசாமி, இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டும் 24.02.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. 1ம் பிரதிவாதி எனக்கு என்ன உறவுமுறை என்றால் எனது உடன்பிறந்த சகோதரர் ஆவார். 3 மற்றும் 4ம் பிரதிவாதிகள் எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது அண்ணன் செல்வராஜின் மகன்கள் ஆவார்கள். தாவா சொத்திற்கு எந்த திசையில் எனது வீடு உள்ளது என்றால் வடமேற்கில் எனது வீடு உள்ளது. எனது வீட்டிற்கு சென்று வர பாதை எங்குள்ளது என்றால் மேற்கே கிழமேல் பொது வீதி உள்ளது. நானும், வாதிகளும் பூர்வாகமாக அதே ஊரை சேர்ந்தவர்கள் தான் என்றால் சரிதான். வாதிகளின் வீட்டிற்கு அருகே நான் தான் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். இவ்வழக்கில் எனது அண்ணன் நீதிமன்றத்திற்கு வருகைதரவில்லை என்றால் சரிதான்.

2. எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை எனது வழக்கறிஞருக்கு யார் சொன்னது என்றால் நான் தான் சொன்னேன். 3ம் பிரதிவாதிக்காகவும் சேர்த்து தான் எனது முதல் விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நானும், மற்ற பிரதிவாதிகளும் தனித்தனியாக குடியிருந்து வந்தாலும் நாங்கள் சேர்ந்து கொண்டு வாதிகளிடம் பிரச்சனை செய்ததால் இவ்வழக்கு எங்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மற்ற பிரதிவாதிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தமும் இல்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தரப்பில் எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

**வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.Yughathymariya

**Additional District Munsif,**

**Kulithalai.**